தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-12-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடலூர் விவசாயிகளுக்கு விதைநெல் வழங்கி வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆய்வு

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி அருகே உள்ள கல்குணம் கிராமத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மை துறை சார்பில் மழையால் பாதிக்கபட்ட 350 விவசாயிகளுக்கு நெல்விதை மற்றும் கத்தரி நாற்றுகள், பலா கன்றுகள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் சுரேஷ்குமார் வழங்கினார்.

கல்குணம் கிராமத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அதிக மகசூல் தரக்கூடிய புதிய ரகமான கோ-51 விதைகள், பாலூர் -2 கத்திரி நாற்றுகள், பாலூர் பலாக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இது குறித்து, கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு. ராமசாமி அவர்கள் கூறும்போது, கடலூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் விவசாய நிலங்களில் பயிர்கள் சேதமடைந்தது குறித்து வேளாண் துறை மூலம் கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது. விவசாயிகளுக்கு ஏற்றபட்டுள்ள இழப்பை கருத்தில் கொண்டு உற்பத்தி, வருமானத்தை அதிகரிக்கும் வகையில் கல்குணம் கிராமத்தில் 350 விவசாயிகளுக்கு நெல் விதைகள், கத்திரி நாற்றுகள், பலாக் கன்றுகள் வழங்கப்பட்டது என்றார்.

இந்த நிகழ்ச்சியில் ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் முனைவர் ரவி அவர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விதைகள் மைய தனி அலுவலர் முனைவர் பாஸ்கரன் அவர்கள், கடலூர் வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோ அவர்கள், வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) ஹரிதாஸ் அவர்கள், உதவி இயக்குனர் (வேளாண்மை) ஏழுமலை அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வசந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


தமிழ்நாடு அரசு
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மற்றும் வேளாண்மைத்துறை


தமிழ்நாடு அரசு
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மற்றும் வேளாண்மைத்துறை
கடலூர் மாவட்டம்